**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No. 129/2017**

| | | |
|---|---|---|
| Deposition of Witness for PW | : | 1 |
| Name (திரு/திருமதி) | : | குமாரி |
| Father's Name/ Husband's Name | : | தண்டபாணி |
| Village & Taluk | : | செஞ்சி |
| Calling | : | இல்லத்தரசி |
| Age | : | 56 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.10.2025**

1,2 ம் எதிரி ஆஜர். 3 மற்றும் 4 ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை :**

1. பட்டியல் சாட்சி–2 தண்டபாணி எனது கணவர் பட்டியல் சாட்சி–3 ஜனகா எனது மகள் ஆவார். 1 ம் எதிரி பன்னீர்செல்வம் எனது மருகன் ஆவார். 4 ம் எதிரி ஆனந்தன் எனது மகனின் மச்சினன் ஆவார்கள். 2 மற்றும் 3 எதிரிகள் எனது உறவினர்கள். எனது மகள் 4 ஜனகா என்பவரை சென்னையில் உள்ள 1 ம் எதிரி பன்னீர் செல்வம் என்பவருக்கு கடந்த 10.09.2009 அன்று சென்னையில் ஒரு திருமண மண்டபத்தில் திருமணம் செய்து வைத்தோம். திருமணத்திற்கு எங்கள் வீட்டில் இருந்து 46 பவுன் தங்க நகைகள், வீட்டு பொருட்கள் வாங்குவதற்காக ரூ.96,000/– ரொக்கம், இரு சக்கர வாகனம் வாங்குவதற்காக ரூ.50000/– பணம் , ஆகியவற்றை சீதனமாக கொடுத்தோம். எனது மகளுக்கு உடல் நிலை சரியில்லாததால் ரூ.6,00,000/–யை 2 ம் எதிரி கண்ணனிடம் ரொக்கமாக கொடுத்தேன். பின்பு எனது மகள் உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் இறந்துவிட்டார். மருத்துவ செலவிற்கான மேற்படி பணத்தை மீண்டும்

தருவதாக எனது மகளின் சம்பந்தியான 2ம் எதிரி மற்றும் எனது மருகனான 1ம் எதிரி கூறினார்கள். ஆனால் அவர்கள் மேற்படி பணத்தை திரும்ப தரவில்லை நான் மேற்படி பணத்தை மிகுந்த கஷ்டத்தில் திரட்டி கொடுத்தேன். எனவே மேற்படி பணத்தை தருமாறு அவர்களிடம் கடந்த 22.01.2013 அன்று கேட்டபோது தருகிறேன் என்று சொன்னார்கள். அதன் பின்னிட்டு 10.02.2013 அன்று நான் வீட்டில் இருந்தபோது 1ம் எதிரி பன்னீர்செல்வம் மற்றும் 2ம் எதிரி கண்ணன், பன்னீர் செல்வத்தின் தம்பி மற்றும் சில நபர்கள் மதிய வேலையில் என் வீட்டினிடம் வந்து உன்னை நான் குத்திடுவேன் என்று மிரட்டினார்கள் அதற்கு நான் கூச்சலிட்டேன். அவர்கள் ஓடிவிட்டனர். இது குறித்து செஞ்சி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவின் நகல் நான் கொடுத்தது தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **மேற்படி புகார் மனுவின் நகல் அ.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது**. காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. 1ம் எதிரிக்கும் எனது மகளுக்கும் இருவீட்டார் சம்மதத்துடன் தான் திருமணம் நடைபெற்றது என்றால் சரிதான். அவர்களுக்கு குழந்தை பிறந்தது குழந்தையின் பெயர் பித்திலாஸ்ரீ ஆகும். குழந்தைக்கு என்ன வயது ஆகிறது, எந்த பள்ளியில் படிக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். திருமணத்திற்கு பின்னிட்டு எனது மகள் 1ம் எதிரியின் வீட்டில் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். சீர்வரிசை மற்றும் நகைகள் கொடுத்ததாக நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல.

2. திருமணத்திற்கு கொடுக்கப்பட்ட சீர்வரிசை பொருட்கள் தங்க நகைகள் மற்றும் ரொக்கம் குறித்த விவரங்கள் நோட்டு புத்தகத்தில் எழுதப்பட்டு அதனை அவர்கள் பெற்றுக்கொண்டதாகவும் நாங்கள் கொடுத்ததாகவும் எழுதிக்கொண்டோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது, நம்பிக்கையின் பேரில் தான் அனைத்து சீர் வரிசைகளையும் செய்தோம். இரு சக்கரம்

வாங்குவதற்காக ரூ.50,000/-யை அவர்கள் கையில் தான் கொடுத்தோம் எந்த சாட்சிகள் முன்னிலையிலும் கொடுக்கவில்லை. மேற்படி விவரம் பொய் என்றால் சரியல்ல.

3. வீட்டு உபயோகபொருட்கள் வாங்குவதற்காக ரூ.93,000/-யை காசோலை மூலமாக கொடுத்தேன் என்று புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். ரூ.75,000/- காசோலையாக எனது மகளுக்கு கொடுத்தோம் என்றால் சரிதான். மேற்படி பணம் தற்போதும் அவரது மீது FD கணக்கில் தான் உள்ளது என்றால் அது விவரம் எனக்கு தெரியாது. ரூ.6,00,000/-யை கடந்த 22.01.2013 அன்று கொடுத்தேன். சாட்சிகள் முன்னியில் கொடுக்கவில்லை. மேற்படி ரூபாய் கொடுத்ததற்காக அத்தாட்சியாக எந்த ஆவணமும் என்னிடம் இல்லை.

4. எனது மகளின் குழந்தையை தற்போது வரை எதிரிகள் குடும்பம் தான் பராமரித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது மகளோ அல்லது அவரது இறப்பிற்கு பின்னிட்டு நானோ எதிரிகள் மீது அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளோமா என்றால் இல்லை. எனது மகளுக்கு இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்துவிட்டது என்றால் சரிதான்.

5. எனது மகளுக்கு பில்ரோத், ஸ்டேன்லி, அப்போலோ ஆகிய மருத்துவமனைகளில் சிகிச்சை செய்தனர் என்றால் சிகிச்சைக்கான பணத்தை நான் கொடுத்தேன். எனது மகளின் சிகிச்சைக்காக 1 மற்றும் 2 எதிரிகள் ரூ.14,00,000/- செலவு செய்தனர் என்றால் சரியல்ல. எதிரிகள் செலவு செய்ததற்கான ரசீதை அவர்கள் வைத்துள்ளனர் என்றாலும், நாங்கள் செலவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல, ரசீதுகளை நான் தான் 1ம் எதிரியிடம் கொடுத்தேன், அதில் எனது கையொப்பம் இருக்கும்.

6. 10.02.2013 அன்று எதிரிகள் மீது இவ்வழக்கு சம்பவத்திற்காக புகார் அளிக்கவில்லை. அ.சா.ஆ.1 புகார் மனுவை எப்போது கொடுத்தேன் என்பது தெரியவில்லை. நான் அளித்த புகாரின் மீது முதல் தகவல் அறிக்கை எப்போது பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. புகார் மனுவில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. புகார் மனுவை நானும், எனது கணவரும் சென்று

கொடுத்தோம். நாங்கள் அளித்த புகார் மனுவை காவல் ஆய்வாளர் வாங்க மறுத்ததால் அவர் மீது கடந்த 13.02.2013 அன்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் புகார் அளித்தோம் என்றால் எனக்கு தெரியவில்லை. நாங்கள் அளித்த புகாரின் மீது விசாரணை செய்து நாங்கள் அளித்த புகார் பொய் என்று தெரிய வந்ததன் பேரில் எங்களுக்கு அறிவுரை கூறி அனுப்பி வைத்தனர் என்றால் சரியல்ல.

7. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு செய்து அதன் பேரில் தான் எங்களது புகார் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை எப்போது பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. புலன் விசாரணை அதிகாரி பிரிவு மாற்றல் அறிக்கையின் மூலம் சட்டப்பிரிவுகளை மாற்றம் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. காவலர்கள் இன்று வரை இவ்வழக்கு தொடர்பாக என்னை விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை. நான் சொல்வது போல் எதிரிகளிடம் நகை, சீர்வரிசை பொருட்கள் மற்றும் பணம் ஆகியவற்றை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

8. பட்டியல் சாட்சி–3 எனது மகள் தற்போது உயிருடன் இல்லை. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எதிரிகள் அவர்கள் செலவு செய்த ரூ.14,00,000/–எங்களிடம் கேட்டபோது அதனை தர மறுத்து அவர்கள் மீது பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது. Sd/–B.Vidhya,

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.